

கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று (28.6.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், "உடன்பிறப்பே வா" என்ற தலைப்பில் சட்டமன்றத் தொகுதி வாரியாக கழக நிர்வாகிகளை தனித்தனியாக சந்தித்துப் பேசினார்.

### 2025 - 2026 ஆம் ஆண்டிற்கான அரசு கலை - அறிவியல் கல்லூரிகளில்

# மாணவர் சேர்க்கைக்கான இணையதள முகவரியில் எந்தக் குறைபாடும் இல்லை!

### மாணவர்கள் அச்சப்பட தேவை இல்லை! உயர்கல்வித்துறை அறிக்கை!

சென்னை, ஜூன்.29-

2025-2026-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கைக்கான இணையதள முகவரியில் குறைபாடுகள் ஏற்பட்டுள்ளதாக வெளிவந்த பத்திரிக்கைச் செய்தி குறித்து உயர்கல்வித் துறை அறிக்கை வருமாறு :-

தமிழ்நாட்டில் உள்ள 180 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில், 2025-2026 ஆம் ஆண்டிற்கான மாணாக்கர்கள் சேர்க்கை தொடர்பான இணையவழி விண்ணப்பப் பதிவு, தமிழ்நாடு அரசின் அதிகாரப்பூர்வ இணையதளமான www.tngasa.in என்ற முகவரியின் மூலமாக நடைபெற்று வருகிறது. இந்த இணையவழி விண்ணப்ப பதிவு 07.05.2025 அன்று தொடங்கி எவ்வித இடர்ப்பாடும் இன்றி மாணவர்களின் பயன்பாட்டிற்காக தொடர்ந்து செயல்பாட்டில் உள்ளது.

இதுவரை இந்த இணையதளத்தில் மொத்தமாக 2,07,915 மாணவர்கள் எந்தவித இடர்ப்பாடுகளும் இன்றி இணையவழியாக விண்ணப்பித்துள்ளனர். இதில், இதுவரை 81,923 மாணவர்கள் வெற்றிகரமாக சேர்க்கை பெற்றுள்ளனர். தற்போது மூன்றாம் கட்ட மாணவர் சேர்க்கை செயல்முறைகள் நடைபெறுகின்றன.

மேலும், முதுநிலை மற்றும் பி.எட். பாடப்பிரிவுகளுக்கான விண்ணப்பப்பதிவும் தற்போது இந்த இணையதளத்தின் மூலமே தொடங்கப்பட்டு மாணவர்கள் பதிவு செய்து வருகின்றனர். செய்திதாளில் வெளிவந்துள்ள செய்திபோல் இந்த இணையதளத்தில் எவ்வித குறைபாடுகளும் இல்லை. மாணவர்கள் எவ்வித அச்சமும் கொள்ளத் தேவையில்லை. www.tngasa.in என்ற இணையதளதில் மட்டும் தங்களது விண்ணப்பங்களை பதிவு செய்து கொள்ளலாம்.

மேலும் கல்லூரிக் கல்வி இயக்ககத்தின் tndce.tn.gov.in என்ற இணையதளம் மூலமும் சென்று இந்த மாணவர் சேர்க்கை www.tngasa.in என்ற இணையதளத்தை சென்றடையலாம். எனவே, செய்திதாளில் வெளிவந்துள்ள செய்தி குறித்து மாணவர்கள் எவ்வித அச்சமும் கொள்ள வேண்டாம் என இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

### அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி எழுதிய தேசிய கல்விக்கொள்கை 2020 எனும்

# மதயானை மக்கள் பதிப்பு - மின்னூல் அறிமுக விழா!

### திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிமுகவுரையாற்றுகிறார்!

சென்னை, ஜூன் 29

பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் எழுதிய தேசிய கல்விக் கொள்கை என்னும் மதயானை நூல் மக்கள் பதிப்பு மற்றும் மின்னூல் பதிப்பு அறிமுக விழா தி.மு.கழக மாணவர் அணி மற்றும் திராவிட மாணவர் கழகம் ஒருங்கிணைந்து நடத்தும் நிகழ்ச்சி ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் தலைமையேற்க, பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஏற்புரை வழங்க இன்று (29.6.2025 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 5 மணியளவில் நடிகவேள் எம்.ஆர்.ராதா மன்றம்,பெரியார் திடல், சென்னையில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சிக்கு தமிழ் கா.அமுதரசன், வி.கே.ஜெ. ராமகிருஷ்ணன், வானவில் விஜய், மு.இளமாறன், செ.பெ. தொண்டறம், ம.பூவரசன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

விழாவிற்கு திராவிட மாணவர் கழக மாநில செயலாளர் இரா.செந்தூர பாண்டியன் வரவேற்புரையாற்றுகிறார்.

இவ்விழாவில் திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி அவர்கள் தலைமை ஏற்று மக்கள் பதிப்பு அறிமுக உரை நிகழ்த்துகிறார்.

விழாவில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஏற்புரையாற்றுகிறார்.

நிறைவாக தி.மு.கழக மாணவரணிச் செயலாளர் இரா. ராஜீவ் காந்தி நன்றி கூறுகிறார்.

### திருமுடிவாக்கம் இ.மணி தலைமை! படப்பை ஆ.மனோகரன்பங்கேற்பு!

# குன்றத்தூர் மத்திய - தெற்கு ஒன்றியத்தில் நல உதவிகள் மாபெரும் பொதுக்கூட்டம்!

### டி.ஆர்.பாலு எம்.பி., - அமைச்சர்கள் தா.மோ. அன்பரசன், கோவி. செழியன் சிறப்புரை!

காஞ்சிபுரம், ஜூன் 29

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் குன்றத்தூர் மத்திய மற்றும் தெற்கு ஒன்றியக் கழகம் சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 ஆவது பிறந்தநாள் விழாவும் நலத்திட்ட உதவிகள் வழங்கி மாபெரும் பொதுக்கூட்டமும் இன்று (29 6 2025 ஞாயிற்றுக் கிழமை) மாலை 5 மணியளவில் திருப்பெரும்புதூர் சாலை வரதராஜபுரம் போலீஸ் பூத் அருகில் நடைபெறுகிறது. இக்கூட்டத்திற்கு குன்றத்தூர் மத்திய ஒன்றியச் செயலாளர் திருமுடிவாக்கம் இ.மணி தலைமை வகிக்கிறார். வரதராஜபுரம் ஊராட்சி மன்றத் தலைவர் மு. செல்வமணி வரவேற்புரையாற்றுகிறார்.

மு.சுப்பிரமணி, வா.நந்தகோபால், வாசுகி மகேஷ், சி. பார்த்தசாரதி, மா.பரிமேலழகன், மூ.ராஜேந்திரன், கா.அன்பழகன், பா.அறிவொளி, தினேஷ், சுந்தசாமி, தா. தட்சணாமூர்த்தி, பி. ராஜன், ரா.செந்தில்குமார், பா. சேகர், ஆ.பாஸ்கரன், ஏ.பிரசாந் குமார், கே.ராமதாஸ், மா.கோபண்ணா, பார்வதி சகாதேவன், அம்பிகா ராஜன், ஸ்டாலின், செல்வகுமார், தெய்வக்கண்ணி, அருணாச்சலம் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி. செழியன், கழகப் பொருளாளர் டி..ஆர்.பாலு எம்.பி., காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் தா. மோ. அன்பரசன் ஆகியோர் நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் படப்பை ஆ. மனோகரன், கே.ஜி. பாஸ்கர் சுந்தரம், திருமதி சரஸ்வதி மனோகரன், ஏ.வந்தே மாதரம், திருமதி உமா மகேஸ்வரி வந்தே மாதரம், சு.பேரரசன், சுசித்ரா வேலு, பொன் ரமேஷ் கனி, மலர்விழி தமிழமுதன், எஸ். கர்ணன், சு.குழுமலை லட்சுமி ஞானசேகர், சா.பாலகிருஷ்ணன், எஸ். வைரம், ஜி.ஏ. ராயப்பா, ரேவதி, வி.எஸ்.கோதண்டராமன், கே.என்.சி. சத்தியமூர்த்தி, கே.எஸ். இளங்கோ, மு. சுப்பிரமணி, வா.நந்தகோபால், வாசுகி மகேஷ், சி. லபார்த்தசாரதி, வி.ஹரி, மா.பரிமேலழகன், மூ.ராஜேந்திரன், கா.அன்பழகன், பா.அறிவொளி, தினேஷ், சுந்தசாமி,

ரா.தீபக். மா.சே. பிரகாஷ், கா.பா. ஆ.டவரசு, பொன் இளைய பாரதி, லோ. சுதாகர்,அஜ்மீர், இரா. குமரவேல், சே. பார்த்திபன், ஜி. பாலாஜி, ஆர்.சையது ரமேஷ், ஜி. இருசப்பன், ஏ.இ. பரசுராமன், டி. அசோக் குமார், ஏ.இ. பஞ்சாட்சரம், பா. வேல்முருகன், சா. ரஞ்சித் குமார், இரா. சந்திரசேகர், மு. குமார் , வா. வீரபாண்டியன், ரா. தமிழ் தாசன், கா. புவராணி, வி.அன்பு, லட்சாவதி, கருணாகரன், குமுதா சுமன், மலர்விழி முருகன், ராஜலட்சுமி ராஜ்,தே.ஹரி கிருஷ்ணன்,உமா சத்தியமூர்த்தி, சுமதி வைத்தீஸ்வரன், ஷீலா தனசேகரன், கோதைநாயகி வரதன், மீனா மோகன், ஆரிக்கம் ஜெயபால், வி.சுதாகர், சாவித்திரி சந்திரன், தா.தமிழமுதன், வள்ளி சுந்தர், வித்யா ரஞ்சித் குமார், வசந்த் சாம்பசிவம் உள்ளிட்ட வரதராஜபுரம் ஊராட்சி கழக முன்னோடிகள், ஊராட்சி இளைஞர் அணி அமைப்பாளர்கள், மாணவரணி, மகளிர் அணி நிர்வாகிகள் பங்கேற்கின்றனர்.

ஆனந்த லட்சுமி ராமதாஸ் நன்றி கூறுகிறார்.

### சென்னை தெற்கு மாவட்டம் வேளச்சேரி கிழக்கு பகுதி

# பாக முகவர்கள்- பாக தொழில்நுட்ப அணி- ஆலோசனைக் கூட்டம்!

### பகுதிக் கழக செயலாளர் துரை கபிலன் அறிவிப்பு !

சென்னை ஜூன்,29

வேளச்சேரி கிழக்கு பகுதிக் கழகச் செயலாளர் துரைகபிலன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

கழக தலைவர் திராவிட மாடல் நாயகர் தமிழக முதல்வர் அவர்களின் ஆணைக்கிணங்க மற்றும் இளம் தலைவர் இளைஞர்களின் எழுச்சி நாயகர் தமிழக துணை முதல்வர் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க சென்னை தெற்கு மாவட்டக் கழக செயலாளர் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் அறிவுறுத்தலின் பேரில் சென்னை தெற்கு மாவட்டம் வேளச்சேரி கிழக்கு பகுதிக் கழகம் சார்பில் கழகத்தில் புதிய உறுப்பினர் சேர்க்கை தொடர் பாக பாக நிலை முகவர்கள் (BLA2) மற்றும் பாகத்தில் உள்ள தகவல் தொழில்நுட்ப அணியினர் பயிற்சிக் கூட்டம் இன்று (29.06.2025 ஞாயிற்றுக் கிழமை) மாலை 06.00 மணியளவில் திருவான்மியூர் கிழக்கு மாட வீதியில் உள்ள ராஜலட்சுமி திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு வேளச்சேரி கிழக்கு பகுதிக்கு உட்பட்ட பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், இளைஞர் அணி துணை அமைப்பாளர், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட அனைத்து அணிகளின் துணை அமைப்பாளர்கள், பகுதி அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்ட கழக நிர்வாகிகள், மற்றும் பாக முகவர்கள் (BLA2) அந்தந்த பாகத்தில் உள்ள தகவல் தொழில்நுட்ப அணியினர் ஆகியோர் தவறாமல் கலந்துகொண்டு பயிற்சி பெற்று "ஓரணியில் தமிழ் நாடு" என்று கழக தலைவர் தங்க தளபதி திராவிட மாடல் நாயகர் வேண்டுகோளுக்கு இணங்க அந்தந்த பாகத்தில் இணையவழியில் 30 சதவீத புதிய உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும். இவ்வாறு பகுதி கழக செயலாளர் துரை கபிலன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



திருவள்ளூர் மத்திய மாவட்டம் பூந்தமல்லி கிழக்கு ஒன்றிய இளைஞரணி சார்பில் தெருமுனை பிரச்சாரக் கூட்டம் ஒன்றிய செயலாளர் ப.ச.கமலேஷ் தலைமையில் மாநில மாவட்ட இளைஞரணி நிர்வாகிகள் பிரபு கஜேந்திரன் , கே.சுரேஷ்குமார் வரவேற்பில் ஒன்றி இளைஞர் அணி அமைப்பாளர் க. பரிமேலழகன் ஏற்பாட்டில் பாரிவாக்கத்தில் நடைபெற்றது இதில் மாவட்ட செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் திமுக செய்த சாதனைகளை விளக்கி சிறப்புரை ஆற்றி இளைஞர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கினார் உடன் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ, எஸ்.கே.ஸ்ரீராம், பம்மல் வீ.தினேஷ், பி.டி.சி.செல்வராஜ், சி.ஜெரால்டு, எம்.முத்தமிழ்செல்வன், வி.குமார், ஜெ.மகாதேவன், ஏ.ஜனார்த்தன், எம்.இளையான், எஸ்.புகழேந்தி, ஏ.ஆர்.பாஸ்கர், ஆர்.பிரபாகரன், வி.பி.பிரகாஷ், ஆர்.செந்தாமரை, ஜி.சி.சி.கருணாநிதி, அக்னி ராஜேஷ் ஏடி.பிரியா குமார், சி.சதீஷ்குமார், கே.பி. ஞானமூர்த்தி, தே. துரைமுருகன், ப.பாபு, துவாரகேஷ், லிங்கேஷ்குமார், வி.தணிகாசலம், பி.கே.ராஜா, ராசையன், ஏ.ஜி.ரவி, டி.குமரேசன், என்.சண்முகம், டி.திருமலை ராஜ், எம்.ராம்பாபு, கே.ஜி.ஆர்.ஸ்டாலின், திருலோகசுந்தர், ந.ச.பாலா, சுமதி அத்திகிரி, உள்பட நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

### அமித்ஷா கட்டும் ஆகாயக் கோட்டை!




### அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் ஐ.சி.எஃப். வ. முரளிதரன் தலைமையில்

# கொளத்தூர் கிழக்குப் பகுதியில் செம்மொழி நாள் புகழரங்கம்!

### திருச்சி சிவா எம்.பி. – அருள்மொழி – கம்பம் பெ.செல்வேந்திரன் – இரா.கிரிராஜன் எம்.பி. புகழுரை!

சென்னை, ஜூன் 29 -

சென்னை கிழக்கு மாவட்ட திமுக, கொளத்தூர் கிழக்கு பகுதி சார்பில் ஜூன் 3 முத்தமிழறிஞரின் 102 வது பிறந்த நாள் செம்மொழி நாளை முன்னிட்டு "செம்மொழி 28" தெற்கே எழுந்த இமயம் திராவிடம் வளர்த்த இதயம் எனும் தலைப்பில் மாபெரும் புகழரங்கம் நேற்று 28.06-25 சனிக்கிழமை அன்று மாலை 6.00 மணியளவில், சென்னை, பெரம்பூர் செம்பியம், ராகவன் தெருவில் நடைபெற்றது.

இப்புகழரங்கத்தில் கொளத்தூர் கிழக்கு பகுதி கழக செயலாளர் ஐ சி எப் வ முரளிதரன் தலைமை வகிக்கின்றார். சென்னை கிழக்கு மாவட்டக் கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் பி.கே.சேகர் பாபு,எ.நாகராஜன் எம்.சி, கே.சந்துரு,சி.மகேஷ்குமார், சரிதாமகேஷ்குமார், வானவில் விஜய், தேவஜவஹர், எஸ்.பன்னீர்செல்வம், எஸ்.தனசேகர், துரைகண்ணன் , ம.அசோக்குமார், ஆர்.எஸ்.சித்திக் ஆகியோ முன்னிலை வகித்தனர்.

பி பழனி, இளா. இளங்கோவன் ,எஸ். கே .ரமேஷ் ,எம். தாவுத் பீ எம் சி ,எல் .டி. தாமஸ், பி.பொன்முடி ,பி. ஊமைத்துரை ,கே. ஜார்ஜ் குமார் ,பி. டி .சி. ரவி, கே .பி. ஆதவன் மணி, ஸ்ரீ தணி எம் சி ,யோக பிரியா தனசேகர் எம் சி ,பி அமுதா பொன்னிவளவன் எம் சி, எஸ் டி. பாஸ்கர் க.விஜயரங்கம், எஸ். முரளி, கே. சந்தானம், எம். துளசி, எஸ்பி, சதீஷ் பாபு, பி. வெங்கடேசன் ,ஜி. செல்வம், ஜி. பொன்னிவளவன், சி. சந்திரசேகர், புரசை, ஜி, ராமகிருஷ்ணன், பொன் புகழேந்தி ஆகியோர் வரவேற்றனர்.

இம்மாபெரும் புகழரங்க த்தில் திருச்சி என் சிவா எம்.பி., திராவிடர் கழக பிரச்சார செயலாளர் வழக்கறிஞர் அருள்மொழி, கழக தேர்தல் பணிக் குழு செயலாளர் கம்பம் பெ.செல்வேந்திரன், கழக சட்ட திருத்த குழுச் செயலாளர் இரா.கிரிராஜன் எம்.பி. ஆகியோர் புகழுரைத்தனர்.

மேலும், இப்புகழரங்கத்தில் மேயர் பிரியா ராஜன், டாக்டர்.கலாநிதி வீராசாமி எம்.பி, ப.தாயகம்கவி எம்.எல்.ஏ, அ.வெற்றி அழகன் எம்.எல்.ஏ, ஜோசப்சாமுவேல் எம்.எல்.ஏ, ப.ரங்கநாதன் , இரா. விடுதலை மாநில நிர்வாகிகள்: கே.எஸ்.ரவிச்சந்திரன் சங்கரிநாராயணன் கவிஞர். நன்மாறன் தமிழன்பிரசன்னா, பி.கே. மூர்த்தி, எஸ்.மணிமுடி, ஆர். வரதன் கே.எஸ்.எம்.நாதன், எம்.விஜயகுமார் பரிதிஇளம்சுருதி என்.பி.எம்.ஷேக்அப்துல்லா, வே.உமாகாந்த், இந்திரஜித். மாவட்ட நிர்வாகிகள்: கோ.ஏகப்பன் ஜி.எம்.தேவன் புனிதவதிஎத்திராசன் இசட். ஆசாத். பகுதி கழக நிர்வாகிகள்: கூ.பி.ஜெயின், வே.வாசு எம். சாமிகண்ணு செ.தமிழ்வேந்தன் டி.எஸ்.பி.இராஜகோபால் எம். டி.ஆர்.நாகராஜன், எஸ்.முரளி சொ.வேலு எஸ்.ராஜசேகர் வி.சுதாகர். கோ.மணி த.வ.செம்மொழி சாவித்திரிவீரராகவன் பி.ஜே.துளசிங்கம் பி.உதயசங்கர் ரமேஷ்(எ)நீலகண்டன், எம்.இப்ராஹிம்கனி, டாக்டர்.ஏ.பி.பூர்ணிமா அ.நிர்மலாதேவி இரா.கலைச்செல்வி மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள்: ப.ஜெகதீஷ் ஜெ. பாலமுருகன் க.வினோத் ஜி. ஜெ.பிரபு ஆர்.டி.சங்கர்நானா வானவில்விஜய் சுதாதீனதயாளன் ராஜேஸ்வரிஸ்ரீதர் பங். சாந்தகுமாரி, ஜி.வி.நாகவள்ளி என்.துலுக்காணம் மோகன் பி.விஜயகுமார் எல்.சம்பத்குமார் க.பா.பிரதீப்குமார் க. கிருஷ்ண மூர்த்தி, ஆ. பெரோஸ்கான் அ.விநாயகம் டி.தாமோதரன் கா.ராஜ்முகமது து.ஆயிரம் இரா.வீரமணி மற்றும் பலர் கொண்டு சிறப்பித்தனர்.

வட்ட கழக செயலாளர் பா.அன்பரசு நன்றி கூறினார்.

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! கே. சந்துரு தலைமை!

# கொளத்தூர் தொகுதியில் மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்!

### அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் – பத்திரிகையாளர் நக்கீரன் கோபால் – பேராசிரியர் - டி.எம்.என் தீபக் வழங்குகின்றனர்!

சென்னை, ஜூன் 29 -

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கொளத்தூர் தொகுதியில் ஜூன் 3 முத்தமிழறிஞரின் செம்மொழி நாள் முன்னிட்டு செம்மொழி 30 "திறனில் அவரவர் உயர்வு! திராவிடம் நமது உணர்வு!" எனும் தலைப்பில் மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நாளை (30.06.2025 திங்கட்கிழமை) மாலை 4 மணிக்கு, கார்த்திகேயன் சாலை, திருவள்ளுவர் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது. கழக சட்டத்துறை துணை செயலாளர் கே.சந்துரு தலைமை வகிக்கிறார்.

மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பகுதிக் கழகச் செயலாளர்கள் ஐ.சி.எப்.வ.முரளிதரன், எ.நாகராசன் எம்.சி, மற்றும் சி.மகேஷ்குமார், சரிதா மகேஷ்குமார் எம்.சி, தேவஜவகர், எஸ்.பன்னீர்செல்வம், வானவில் விஜய், எஸ்.தனசேகர், துரைகண்ணன்,ம.அசோக்குமார், ஆர்.எஸ்.சித்திக், ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கொளத்தூர் கிழக்கு பகுதி கழக நிர்வாகிகள் பி.பழனி, இலா.இளங்கோவன், எஸ். கே.ரமேஷ், எம் தாவூதிபீ எம்.சி, எல்.டி.தாமஸ், கொளத்தூர் கிழக்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள் பி.ஊமைதுரை,பி. டி.சி. ரவி,பி.பொன்முடி, கே. ஜார்ஜ்குமார், பா.அன்பரசு, டி.சந்திரசேகர் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், பத்திரிகையாளர் திரு.நக்கீரன் கோபால், கழக மாற்றுத்திறனாளிகள் அணிச் செயலாளர் பேராசிரியர் டி.எம்.என்.தீபக், ஆகியோர் கலந்து கொண்டு மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் தலைமை செயற்குழு உறுப்பினர், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன், கழக அயலக அணித் தலைவர் மருத்துவர் கலாநிதி வீராசாமி எம்.பி, கழக சட்டத்திட்ட திருத்தக் குழுச் செயலாளர் இரா.கிரிராஜன் எம்.பி, தலைமை செயற்குழு உறுப்பினர், தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனத் தலைவர் ப.ரங்கநாதன், கொளத்தூர் தொகுதி தேர்தல் பார்வையாளர் இரா.விடுதலை, கே.எஸ்.ரவிச்சந்திரன், பி.கே.மூர்த்தி எம்.சி, தமிழன் பிரசன்னா, சங்கரி நாராயணன், எஸ்.மணிமுடி, கவிஞர் நன்மாறன், எம்.விஜயகுமார், கே.எஸ்.எம்.நாதன், என்.பி. எம்.ஷேக் அப்துல்லா, பரிதிஇளம்சுருதி எம்.சி, ஆர்.வரதன், வே.உமாகாந்த், கோ.ஏகப்பன், ஜி.எம்.தேவன், இசட்.ஆசாத் எம்.சி, கூ.பீ.ஜெயின் எம்.சி, ஸ்ரீராமுலு எம்.சி, சொ.வேலு எம்.சி, டாக்டர் ஜி.சாந்தகுமாரி எம்.சி, செ.தமிழ்வேந்தன், எம்.சாமிகண்ணு, வே. வாசு, எஸ்.இராஜசேகர், எஸ். முரளி, டி.எஸ்.பி.இராஜகோபால் எம்.சி, எம்.டி.ஆர்.நாகராஜ், வி.சுதாகர், கோ.மணி, டி.வி.செம்மொழி எம்.சி, பி.ஜெ.துளசிங்கம், வி.ரமேஷ் (எ) நீலகண்டன்எம்.சி, பி.உதயசங்கர், சாவித்திரி வீரராகவன், டாக்டர் ஏ.பி.பூர்ணிமா எம்.சி, எம்.இப்ராஹிம் கனி, அ.நிர்மலாதேவி, இரா. கலைச்செல்வி மற்றும் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், மாவட்ட கழக மாமன்ற உறுப்பினர்கள், பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், மாவட்டப் பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் பலர்கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

68 வது வட்டக் கழகச் செயலாளர் கே.பி.ஆதவன்மணி நன்றி கூறுகிறார்

### ஆர்.டி.சேகர் ஆலோசனை வழங்குகிறார் ! ஜே.ஜே.எபினேசர் முன்னிலை !

# ஆர்.கே.நகர் மேற்கு பகுதியில் ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர்கள் சேர்க்கை ஆலோசனைக்கூட்டம் !

### கலாநிதி வீராசாமி – கே.வி.லோகேஷ் பங்கேற்பு ! எஸ்.ஜெபதாஸ்பாண்டியன் வேண்டுகோள்!

சென்னை, ஜீன்29

சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் மேற்கு பகுதியில் 'ஓரணியில் தமிழ்நாடு ' உறுப்பினர் சேர்க்கை கூட்டம் கலந்துகொள்ளுமாறு பகுதிச்செயலாளர் எஸ்.ஜெபதாஸ்பாண்டியன் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு :

ஆர்.கே.நகர் மேற்கு பகுதியில் ஓரணியில் தமிழ்நாடு' உறுப்பினர் சேர்க்கை பாக முகவர்கள் மற்றும் பாக சமுக வலைதள பணியாளர் ஆலோசனைக் கூட்டம் இன்று (29.06.2025 ஞாயிற்றுக்கிழமை) மாலை 5.00 மணியளவில் நாடார் உறவின் முறை திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

இதில் ஆர்.கே.நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே. எபினேசர் எம்.எல்.ஏ, முன்னிலையில் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, தொகுதி பொறுப்பாளர் ஆர்.வி.லோகேஷ், ஆகியோர் பங்கேற்பில் மாவட்ட கழக பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ., ஆலோசனை வழங்குகிறார்.

நிகழ்ச்சியில் பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், பாக முகவர்கள், பாக சமுக வலைதள பணியாளர்கள் (பிடிஏ) கலந்துகொள்ளுமாறு பகுதி செயலாளர் எஸ்.ஜெபதாஸ் பாண்டியன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



சென்னை கிழக்கு மாவட்ட திமுக, கொளத்தூர் கிழக்கு பகுதி சார்பில், ஜூன் 3 முத்தமிழறிஞரின் 102 வது பிறந்தநாள் "செம்மொழி நாள் விழாவை முன்னிட்டு அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் ஐ.சி.எஃப். வ.முரளிதரன் தலைமையில் நடைபெற்ற புகழரங்கத்தில் திருச்சி சிவா எம்.பி. வழக்கறிஞர் அருள்மொழி – கம்பம் பெ.செல்வேந்திரன் ஆகியோர் உரையாற்றினார். உடன் இரா.கிரிராஜன் எம்.பி., கலாநிதி வீராசாமி எம்.பி. உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.